## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் வீட்டு உபயோகத்தை உள்ளடக்கிய தாழ்வழுத்த மின் நுகர்வோருக்கு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கணக்கெடுக்கப்பட்டு மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது நிலவிவரும் கொரோனா வைரஸ் பாதிப்பினால் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதால், மின் நுகர்வோர் மற்றும் ஊழியரின் பாதுகாப்பு காரணம் கருதி, மின் கணக்கெடுப்பு எடுக்க முடியாத நிலையில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மின் கணக்கீடு செய்யப்படாமல் முந்தைய மாதம் மின்நுகர்வோர் செலுத்திய தொகையை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இவ்வாறு வசூல் செய்யப்படும் தொகை அடுத்து வரும் மாத கணக்கெடுப்புத் தொகையில் சரிசெய்யப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால் ஊரடங்கு கால கட்டத்தில் வீட்டு மின்நுகர்வு அதிகரித்துள்ளதால் மின் கணக்கெடுப்பு நடத்தும் பொழுது அதிக கட்டணம் வரும் நிலையில் மின்வாரியம் முந்தைய மாத கட்டணத்தை மட்டுமே கழித்து யூனிட்டை கழிப்பதில்லை என்று ஊடகங்களில் வரும் செய்தி தவறானதாகும். மேலும் நடிகர் திரு.பிரசன்னா அவர்கள் மின்வாரியம், ஊரடங்கு காலகட்டம் நிறைவடைந்த பின்பு மின் கணக்கெடுப்பு என்ற முறையில் கொள்ளை அடிப்பதாக தவறான செய்தியை வெளியிட்டுள்ளார்.

இந்த கணக்கெடுப்பு முறையானது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகளின்படி நடைமுறைப்படுத்தப்படுவதால் நடிகர் திரு.பிரசன்னா அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தை கடும் சொற்களால் குற்றம்சாட்டுவது கண்டிக்கத்தக்கதாகும்.

நடிகர் திரு.பிரசன்னா அவர்கள் வீட்டில் இரண்டு மின் இணைப்புகள் உள்ளன. மின் இணைப்பு எண்.**328–010–60** மற்றும் **328–010–61**. இந்த மின் இணைப்பு எண்.**328–010–60**–ஐ கணக்கீடு செய்ததில் ஜனவரி மாதம் யூனிட் **2280** மின் நுகர்வுக்கு ரூ.**13,528/–**ஐ செலுத்தியுள்ளார். மார்ச் மாதம் ஊரடங்கு அறிவிப்பால் கணக்கீடு செய்ய முடியாத நிலையில் முந்தைய மாத கட்டணமான ரூ.**13,528/–** நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த கட்டணம் இதுவரை மின்வாரியத்திற்கு செலுத்தப்படவில்லை.

மேற்கண்ட மின் இணைப்பில் மே மாதம் நான்கு மாதங்களுக்கான மொத்த நுகர்வு **6920** யூனிட் என்று கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த **6920** யூனிட்டை மொத்தமாக கணக்கிட்டால் இதற்கான கட்டணம் ரூ.**44,152/–** ஆகும்.

ஆனால் செய்தி குறிப்பில் கூறியுள்ளபடி **6920** யூனிட்டானது இரண்டு மாத மின் கணக்கெடுப்பு அடிப்படைடயில் இரு இரண்டு மாத நுகர்வோக பிரிக்கப்பட்டு **3460** யூனிட், வீதப்பட்டியலின்படி (Tariff Slab) மின் கட்டணம் கணக்கிடப்பட்டுள்ளது.

**3460** யூனிட்டுக்கான மின் கட்டணம் ரூ.**21,316/–** ஆகும். ஆக இரண்டு **3460** யூனிட்டுக்கான மின் கட்டணம் ரூ.**42,632/–** ஆகும். இவற்றில் முந்தைய மாத கட்டணம் ரூ.**13,528/–** கழிக்கப்பட்ட பின் ரூ.**29,104/–** மட்டுமே மே மாத கட்டணமாக வசூலிக்கப்படும். ஆனால் நடிகர் திரு.பிரசன்னா அவர்கள் முந்தைய மாத கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.**13,528/–**ஐ செலுத்தாத காரணத்தினால் அவர் மொத்தமாக செலுத்த வேண்டிய தொகை ரூ.**42,632/–** ஆக உள்ளது.

இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை, வழக்கமான நடைமுறை கணக்கெடுப்பு முறையில்தான் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

ஆகவே மின்சார வாரியத்தால் மின் கட்டணம் கணக்கீடு செய்யப்படும் பொழுது, நான்கு மாத மின் நுகர்வு இரு இரண்டு மாத மின் நுகர்வாக பிரிக்கப்பட்டு அதற்கான வீதப்பட்டியலில் (Bi-monthly Slab) மின் கட்டணம் கணக்கிடப்பட்டு, முந்தைய மாத கட்டணம் கழிக்கப்பட்டபின் மின் கட்டண தொகை கணக்கிடப்படுகிறது. இதை கருத்தில் கொள்ளாமல், முந்தைய மாத யூனிட்டை கழிக்காமல் தொகையை மட்டுமே கழிக்கப்படுகிறது என்ற செய்தி தவறானதாகும். பொதுமக்கள் தங்களது கணக்கீட்டு முறையில் சந்தேகங்கள் இருந்தால் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தை அணுகி தங்களது சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளலாம். மற்றும் கணக்கீடு செய்யப்படும் முறை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் www.tangedco.gov.in என்ற இணையதளத்திலும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இணைப்பு – **2** தாள்கள்

By Order of the CMD/TANGEDCO

ஒப்பம்xxx **03.06.2020**
தலைமை நிதிகட்டுப்பாட்டு அலுலவர்/வருவாய்

**328–010–060**

| மின் அளவீடு கணக்கீடு செய்யப்பட்ட மாதம் | மின் அளவீடு | நுகர்வு கணக்கீடு (யூனிட்டில்) | கணக்கீட்டு தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| நவம்பர் 2019 | 13550 | | |
| ஜனவரி 2020 | 15830 | 2280 | மின்கட்டண விபரம்<br>0–100 இல்லை<br>101–200 350<br>201–500 1380<br>501–2280 11748<br>நிலைக்கட்டணம் 50<br>–––––<br>மின்கட்டண தொகை 13528<br>––––– |
| மார்ச் 2020 | முந்தைய மாத கணக்கீடு தொகை | | 13528 |
| மே 2020 | 22750 | 6920 | இருமாதம் ஒன்றிற்கான நுகர்வு<br><br>6920/2 = 3460 யூனிட்டுகள்<br><br>மின் கட்டண கணக்கீடு:<br>மின்நுகர்வு கட்டணம்<br>0–100 இல்லை<br>101–200 350<br>201–500 1380<br>501–3460 19536<br>நிலைக்கட்டணம் 50<br>–––––<br>மின்கட்டண தொகை 21316<br>–––––<br>இரண்டு இருமாதங்களுக்கு<br>ரூ.21316x2 = ரூ.42632<br><br>**கழித்தல்:**<br>முந்தைய மாத<br>மின் கணக்கீடு = ரூ.13528<br><br>மீதத்தொகை மே மாதத்தில் –––––<br>செலுத்த வேண்டியது = ரூ.29104<br>––––– |

328–010–061

| மின் அளவீடு கணக்கீடு செய்யப்பட்ட மாதம் | மின் அளவீடு | நுகர்வு கணக்கீடு (யூனிட்டில்) | கணக்கீட்டு தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| நவம்பர் 2019 | 11590 | | |
| ஜனவரி 2020 | 13500 | 1910 | மின்கட்டண விபரம்<br>0–100 இல்லை<br>101–200 350<br>201–500 1380<br>501–1910 9306<br>நிலைக்கட்டணம் 50<br>–––––<br>மின்கட்டண தொகை 11086<br>––––– |
| மார்ச் 2020 | முந்தைய மாத கணக்கீடு தொகை | | 11086 |
| மே 2020 | 17770 | 4270 | இருமாதம் ஒன்றிற்கான நுகர்வு<br>4270/2 = 2135 யூனிட்டுகள்<br><u>மின் கட்டண கணக்கீடு:</u><br>மின்நுகர்வு கட்டணம்<br>0–100 இல்லை<br>101–200 350<br>201–500 1380<br>501–2135 10791<br>நிலைக்கட்டணம் 50<br>–––––<br>மின்கட்டண தொகை 12571<br>–––––<br>இரண்டு இருமாதங்களுக்கு<br>ரூ.12571x2 = ரூ.25142<br>**<u>கழித்தல்:</u>**<br>முந்தைய மாத மின் கணக்கீடு = ரூ.11086<br>–––––<br>மீதத்தொகை மே மாதத்தில் செலுத்த வேண்டியது = ரூ.14056<br>––––– |